**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 118/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : பிரகாசம் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2025

---

**முதல் விசாரணை:**

நான் விபத்து நடந்த சமயத்தில் வில்லாணியில் குடியிருந்தேன் தற்போது உசிலம்பட்டி குடியிருந்து டைல்ஸ் கடையில் வேலை பார்த்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ராமர் என்பவரை எனக்கு தெரியும்.அ.சா.1 , அ.சா.2, அ.சா.3 யை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 07.04.201ம் தேதி ராமர் என்பவருக்கு விபத்து நடந்ததை கேள்விப்பட்டு மாலை 5.45 மணிக்கு உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் நான், மூர்த்தி என்பவரை அழைத்து கொண்டு விபத்து நடந்த இடத்தை பார்ப்பதற்காக 6.45 மணிக்கு தி.விலக்கு சென்றேன். அங்கு நானும் மூர்த்தியும் பேசி கொண்டிருந்தபோது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதி கையொப்பம் வாங்கி கொண்டார்கள். போலீசார் தயார் செய்த அறிக்கையை சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். **அந்த பார்வை மகசர் அ.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி கையொப்பத்தை சம்பவ நடந்த இடத்தில் கையெழுத்து செய்தேன். என்னுடன் மூர்த்தி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். வழக்கு விஷயமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

விபத்தில் இறந்த ராமன் என்னுடன் படித்த நபர் மற்றும் ஒரே ஊர்காரரர் ஆவார். சம்பவ நடந்த அன்றையதினமே 6.45 மணிக்கு தி.விலக்கு சென்றேன் என்றால் சரிதான். அப்போது இருண்ட நேரம் என்றால் அரை இருட்டாக இருந்தது. அந்த சமயத்தில் தான் சம்பவத்தை பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். நான் செல்வதற்கு முன்பாக சுமார் 15 நபர்கள் அங்கு இருந்தார்கள். நான் எழுதிய பேப்பரில்

முதலாவதாக கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதி இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் படித்து காட்டவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடம் சென்று விபத்து நடந்த இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றும், அரசு மருத்துவமனையில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு இறந்தவர் எனது நண்பர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல.

S.d./Prakasam
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.